வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2322/ஆ2/2025 நாள்: .12.2025.

பொருள்: பள்ளிக் கல்வி–வேலூர் மாவட்டம்– வீர தீர செயலுக்கான அண்ணா பதக்கம் 2026 தகுதி வாய்ந்த அரசு ஊழியர்கள் விண்ணப்பிக்க தெரிவித்தல்–சார்பு.

பார்வை:
1. From the secretary to government public general department letter No. e-7975/Genl-1/2025, dated: 05.11.2025.
2. Chennai-9, secretariat School education department deputy secretary to government letter No.543/GL-II/2025-1 dated: 07.11.2025.
3. பள்ளிக்கல்வி இணை இயக்குனர் இடைநிலை கல்வி செயல்முறைகள் ந .க. .எண்061832/ஐஇ/3/2025. நாள் :18.11.2025.

-----

பார்வை(3)–இல் காணும் செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு ஆண்டுதோறும் குடியரசு தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வீரதீர செயல்களுக்கான அண்ணா பதக்கம்(Anna medal for gallantry) பொதுமக்களில் மூவருக்கும் சீருடை பணியாளர்கள் உட்பட அரசு ஊழியர்களில் மூவருக்கும் தலா ரூ.9,000/ – மதிப்பிலான பதக்கமும் ரூ.1,00,000/– மதிப்பிலான காசோலையும் வழங்கப்படுகிறது.

எனவே, 2026ஆம் ஆண்டு அண்ணா பதக்கம் பொதுமக்களில் மூவருக்கும் சீருடை பணியாளர்கள் உட்பட அரசு ஊழியர்களில் மூவருக்கும் வழங்கப்பட உள்ளதால் பார்வை(2)–இல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளை பின்பற்றி தகுதி வாழ்ந்த நபர்கள் தங்கள் அலுவலகங்கள்/பள்ளியில் இருப்பின் https://awards.tn.gov.in என்ற இணையதளத்தில் 15.12.2025–க்குள் பதிவேற்றம் செய்து அதன் நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும், தகுதி வாய்ந்த பணியாளர்கள்/நபர்கள் எவரும் இல்லை எனில் தவறாமல் இன்மை அறிக்கை அனுப்புமாறும் மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை/தொடக்கக் கல்வி/தனியார் பள்ளிகள்) மற்றும் அனைத்து அரசு/அரசு உதவி பெறும் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: அரசு கடித–நகல்கள்.

8/12/25

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர்
   (இடைநிலை/தொடக்கக் கல்வி/தனியார் பள்ளிகள்)
   மாவட்டக் கல்வி அலுவலகம், வேலூர்.
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர்.
   (மாவட்டக் கல்வி அலுவலர்(தொடக்கக் கல்வி)மூலமாக)
3. தலைமை ஆசிரியர்கள்
   அனைத்து அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.